DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :150/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -4 (LW -7)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி.தேன்மொழி | Caste | : | |
| Husband Name | : | திரு.தினேஷ் | Calling | : | உதவி புவியியலாளர் (Mines and Minerals Dept.) |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **15.07.2026.**

**PW - 4 (LW - 7)**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது பழைய கலெக்டர் அலுவலகத்தில் உள்ள புவியியல் மற்றும் சுரங்க துறையில் உதவி புவியியலாளராக பணிபுரிந்து வருகிறேன். தாத்தையங்கார் பேட்டை காவல் துறையினர் மணல் கடத்தல் சம்பந்தமாக TN-22-CY-7134 என்ற Eicher 909 என்ற வண்டியை மணலுடன் பிடித்துவிட்டதாக வழக்கு பதிவு செய்ததன் பேரில் திருச்சி முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவுப்படி 1-வது எதிரி தனுஷ் பிரபு என்பவர் ரூ.30,000/-த்தை எங்கள் துறையில் செலுத்தியுள்ளார். அதற்கு கொடுத்த ரசீது **அ.த.சா.ஆ.4** ஆகும் எதிரி தரப்பில் ஆட்சேபனை இல்லை. என்னை போலீசார் விசாரித்தார்கள். அந்த ரசீதை கொடுத்தது நான் தான்.

II ADJ COURT, TRICHY

**எ.த.கு.வி** :

| | |
|---|---|
| **கேள்வி** | 2024–ம் ஆண்டு யார் உங்கள் துறையில் உதவி இயக்குநராக இருந்தது? |
| **பதில்** | திரு.அண்ணாதுரை. |
| **கேள்வி** | அந்த காலகட்டத்திலும் நீங்கள் உதவி புவியியலாளராகத்தான் வேலை செய்தீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | குறிப்பாக போலீஸ் விசாரணையில் நீங்கள் உதவி இயக்குநர் என சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அப்பொழுது நீங்கள் பொறுப்பு உதவி இயக்குநர் பதவியிலும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அந்த ரசீது உதவி இயக்குநருக்காக என கையெழுத்து செய்துள்ளீர் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீதிமன்ற பிணை உத்தரவின் நகலை உங்களிடம் கொடுத்து தான் பணம் செலுத்தப்பட்டது என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அது தவிர வழக்கு விவரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால்? |
| **பதில்** | சரிதான். |

**மறுவிசாரணை** : இல்லை

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 15.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 15.07.2026

II ADJ COURT, TRICHY